செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிஹு (1889) ஆவணி மீ ௨௪உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரணஹு ஆடி மீ கரு உ வெள்ளிக்கிழமை (31-7-1970) [இல-கஎ

# "...... அஞ்சவேண்டியதில்லை"

## திருமுருகன் அருள் எம்மைக் காக்கும்

[ திரு. இராஜ ராஜேஸ்வரன் — தங்கராசா அவர்கள்
வழக்கறிஞர், நல்லூர், யாழ்ப்பாணம் ]

முருகப்பெருமான் முழுமுதற் கடவுள். அவர் எல்லாம் அறிபவர். எங்கும் நிறைந்தவர் சர்வ வல்லபமுடையவர். அவர் துஷ்டர்களைத் தண்டித்து சிட்டர்களைப் பாதுகாப்பவர் நீதி தவறியவர். திருச்செந்தூர், மாவிட்டபுரம், கதிர்காமம, கந்தவனம், வேருகல் கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி முதலிய திவ்விய தலங்களில் அடியார்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் பொருட்டுக் கோவில்கொண்டெழுந்தருளியுள்ளார்.

நாட்டையாளும் மன்னர்களுடைய ஆஞ்ஞையும் அவருடைய ஆஞ்ஞைக்கு உட்பட்டதே வேதாகமங்கள் அவருடைய திருவாக்கு. அரசர்களும் பிறரும் அவருடைய வேத வாக்கியங்களைப் பேணி ஒழுகுதல் வேண்டும்.

இறைவனுடைய ஆலயங்களின் தூய்மையைப் பாதுகாத்தல் மக்களுடையை இன்றியமையாத கடமையாகும்.

சைவர்கள் கன்மத்தில் நம்பிக்கையுடையவர்கள் புண்ணியம் செய்தவன் இன்பம் அடைவான். பாவம் செய்தவன் துன்பம் அடைவான் அக்கன்ம பலன்களை முருகப் பெருமானே அளந்து கொடுப்பார்.

பறங்கியர், ஒல்லாந்தர் பிரித்தானியர் காலத்தில் நலிவடைந்தும் எங்கள் சைவ சமயம் நிலைத்திருக்கின்றது முருகப்பெருமானின் திருவருளினுலென்பதை நாங்கள் மறத்தல் கூடாது எதிர்காலத்திலும் முருகப்பெருமான் சைவ சமயத்தைப் பாதுகாத்து எங்களுக்கு அநுக்கிரகம் செய்வார்.

அஞ்சவேண்டியதில்லை.
அஞ்சுவது யாதொன்றுமில்லை.



திருச்சிற்றம்பலம்

தெய்வத் திருமலைச்
செங்கோட்டில் வாழும்
செழுஞ் சுடரே
வைவைத்த வேற்படை
வானவனே மறவேனுனை நான்
ஐவர்க்கிடம்பெறக்
காலிரண் டோட்டி
யதிலிரண்டு
கைவைத்த வீடு
குலையுமுன்னே வந்து
காத்தருளே.

திருச்சிற்றம்பலம்

—அருணகிரிநாதசுவாமிகள்.

## கந்தபுராணப் பிரசங்கம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் வருகிற வெள்ளிக்கிழமை 7-8-70) ஆரம்பமாகின்றது. திருவிழாக் காலத்தில் நல்லை ஞானசம்பந்தராதீன கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் 'கந்தபுராண விரிவுரை' தொடர்பாக நடாத்தப்பெறும். தினமும் இரவு 9½ மணிக்குப் பிரசங்கம் ஆரம்பமாகும். கொடியேற்ற விழாவன்று தொடங்கி வைரவர் மடைத் தினத்தன்று [பூங்காவன த்திருவிழாவுக்கு மறுதினம்] வரையில் கந்த புராணப் பிரசங்கம் பூர்த்தியாகும்.

(நமது நிருபர்)




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## சைவ சமயக் கல்வி

### ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரவர்கள்

[தொகுத்தவர்: ஆசிரியர் மா பீதாம்பரன், திருக்கோணமலை]

முன் வளர்ச்சி 2.

கடவுட் பக்தியும் நற்குண நற்செய்கையும் தியாக புத்தியுமுடைய ஆசிரியர்களே நமது மாணவரிடத்து நல்லொழுக்கத்தை விருத்தி செய்யும் ஆற்றல்சான்றவராவர் மனோபலத்துக்குத் தேகபலம் இன்றியமையாதது; இவ்விரண்டினுக்கும் பிரமசரியம் இன்றியமையாதது வித்தியார்த்திகளது தேகமும் மனமும் பலமடையும்படி அவர்களைப் பிரம்சரிய நெறியில் ஒழுகும்படி செய்யவேண்டும்.

அறிவு நூற்களை ஆராய்வோடு கற்றற்கு மொழிவளம் நிரம்பியிருக்க வேண்டுமாதலின் தாய்மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபற ஆராய்ந்து சிந்தனைத் தெளிவும் வாக்குத் தெளிவும் உடையராதல் வித்தியார்த்திகளது முதல் நோக்கமாக விருத்தல் வேண்டும். பல திறப்பட்ட பாஷைகளைக் கற்பதனல் அறிவு விசாலிக்குமாதலினலே தாய்மொழியில் ஒருவாறு தேர்ச்சிஎய்திய மாணவனுக்கும, பிற மொழிகளையும அவற்றிலுள்ள அறிவு நூல்களையும் கற்பித்துவைக்கலாம். கணிதம் தருக்கம் முதலியன நுண்ணறிவினை விருத்தி செய்வனவாதலின் அவற்றிற் பயில்வது இன்றியமையாதது.

வைதிக சைவத்துக்குரிய ஆதார நூல்களனைத்தும் வடமொழியிலிருத்தலினலே வடமொழிப் பயிற்சி சைவ மாணவருக்கு இன்றியமையாதது. திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலே ஒரு மாணவர் இல்லம் தாபித்தல் வேண்டும். மாணவர் இல்லத்தின் சார்பாகத் தமிழ் சமஸ்கிருத வித்தியாபீடம் ஒன்றும், ஆராய்ச்சிப் புத்தகசாலையொன்றும் ஏற்படுத்தி இவற்றின் மூலமாகச் சமய அறிவையும், உலகியலறிவையும் விருத்தி செய்தல் வேண்டும்.

நமது பாலியருடைய கல்விக்காகவேண்டிய முயற்சிகளை நாமே செய்யவேண்டும், அந்நிய மதத்தினருடைய ஆதரவை நாடிநிற்பது முறையாகாது. சைவாசிரியர்களும சைவப் பிரபுக்களும், சமயாபிமானம் பாஷாபிமானம், தேசாபிமானம் மிக்க சைவநன்மக்களும் சைவக் கல்வியின் வளர்ச்சிக்காக முயற்சிக்க வேண்டும், தியாகபுத்தியுடைய முதியோர் முன்மாதிரியாயிருப்ப, அவரைப் பின்பற்றியொழுகும் இளையோர் தேசத்திருப்பணி இயற்றுவாரெனின் நாடு நலமடையும எனபதற்கைய மில்லை.

[விவேகானந்தன் குரோதன ஹு மாசி மீ]

அறிவாகிய விளக்கு வரும்போது அவித்தையாகிய பொய்யிருள் இருந்த இடந்தானும இல்லாது மறைந்தொழியும்; தேடினுலும அகப்படாது. அறிவாய் நின்றவிடத்து, அறியாமையேதுமில்லையென்று வேத வாக்கியங் கூறும். இக் கருத்தேபற்றித் தாயுமான சுவாமிகளும்,

"போத மென்பதே விளக்கோவ்வும் அவித்தைபோய் யிருளாந்
தீதி லாவிளக் கெடுத்திருள் தேடவுந் சிக்கா
தாதலாலறி வாய்நின்ற விடத்தறி யாமை
ஏதும் இல்லையேன் றெம்பிரான் சுருதியே யியம்பும்".

நமது சிறுவரை நமது சற்சமய நெறியிலே பயிற்றுவதற்கு நமக்கென்று கல்விச்சாலைகள் வேண்டும்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

## தருமபுர ஆதீன மகாசந்நிதானமவர்கள்

ஆதீனத்தின் அருளாட்சிப் பொறுப்பு ஏற்று

## 25-ஆம் ஆண்டு ஆட்சிவிழா

["இந்துசாதனம்" அபிமான நிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25 ஆவது பட்டம் ஸ்ரீ ல ஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தின் அருளாட்சியை ஏற்றுக் கொண்டு, இதற்கு முன்னர் அருளாட்சியை நடத்திக் கொண்டு வந்துள்ள எந்த மகாசந்நிதானங்களும் செய்திராத, நற்பணிகளை உலகம் புகழும் வண்ணம் நடத்திக்கொண்டு வந்து, வைகாசி சதய நட்சத்திரத்தன்று 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளி விழா நடைபெற்ற பிறகு, ஸ்ரீ ல ஸ்ரீ கயிலை குருமணிகள, திருமுறை வாணர்கள். சிவாசரியர்களை வேதவிற்பன்னர்கள் (ஆக 3, பேர்களுடன்) ஆகியோர்களுடன் எழுந்தருளி 10 தினங்களுக்கு மேல் காசிக்ஷேத்திரத்தில் தங்கி கங்காஸ்நானம் கேதாரேசர், விசுவேசர், அன்னபூரணி, தண்டபாணி - காலபைரவர் மூர்த்தங்களைத் தரிசனம் செய்து கொண்டார்கள். கங்கையில் உள்ள 64 (துறைகள்) கட்டிடங்களையும் படகு மூலம் எழுந்தருளி புனித நீராடினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் பாற்கடலில் நீராடுவது போல் விசுவேசர், அன்னபூரணி, கேதாரேசுவர் மூர்த்தங்களுக்கு பாலா

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ஞு ஆடி மீ கரு-உ வெள்ளிக்கிழமை [1970]

# ஒழுக்கம் விழுப்பந் தரும்

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினு மோம்பப்படும்"

ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலால் அது உயிரினும் மேலாகக் கருதிக் காக்கப்படும் உயிரினுக்குச் சிறப்பினை யருளி இம்மைக்கும் அம்மைக்கும் துணையாவது அறமே. அறங்களெல்லாவற்றுள்ளும் சிறந்தது ஒழுக்கம். நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் தரும். தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பத்தைப் பயக்கும்.

ஒரு நாட்டினுக்கு மேன்மையான செல்வம் ஒழுக்கமுடைய மக்களேயாகும். ஆகையினால் நாட்டில் வாழும் முதியோர்கள் சிறுவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் பயிற்றி நாட்டினது வளத்தைப் பெருக்க முயலுதல் வேண்டும். சிறுவர்கள் முதியோர்களுடைய வாழ்க்கை முறையைப் பின் பற்றி வாழும் இயல்புடையராகையினால் முதியோர்கள் முதற்கண் அற வாழ்வு நடத்துதல் வேண்டும். அப்பொழுது சிறியோர்கள் அவர்களைப் பின்பற்றி வாழ்வார்கள்.

சிறுவர்கள் தங்கள் காலத்தைச் சற்கருமங்களைப் புரிதலில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். நாட்டில் சிறுவர்களுடைய ஒழுக்கம் கெடுதலுக்குக் காரணம் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுங் காலத்தை விட எஞ்சிய ஓய்வு நேரத்தை யாவர்க்கும் நல்ல பயன் தரும் முயற்சிகளில் பயன்படுத்தாமையாகும். அவர்கள் சோம்பலுடையவர்களா யிருத்தலும் ஆகாது. முயற்சி ஒருவருக்குச் செல்வத்தைக் கொடுக்கும். முயற்சியின்மை அவனுக்கு வறுமையை யளித்துவிடும்.

"மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
குளுளா டாமரையி னுள்"

தாமரையினுள் - இலக்குமி. அவளுடைய தமக்கையை மூதேவி அல்லது முகடி என்றழைப்பர். சோம்பலுடையவரிடத்தில் கரிய சேட்டையாகிய மூதேவி வாழ்வாள் சோம்பலில்லாதவனிடத்தில் திருமகள் சென்றிருந்து வாழ்வாள்.

சிறுவர்கள் பள்ளிக்கூடப் படிப்பில்லாத நேரங்களில் உடற் பயிற்சிக்குரிய விளையாட்டுக்களில் ஈடுபடலாம். தாய் தந்தையருடைய வீட்டுப் பணிக்கு உதவி புரியலாம், வீட்டுத் தோட்டம் செய்யலாம். அறிவு நூல்களைப் படிக்கலாம். தினமும் காலை அல்லது மாலை நேரங்களில் ஆலய வழிபாடு செய்யலாம். சிவ நாமம் சொல்லலாம்; தத்தம் ஆலய வழிபாட்டு முறைகளைத் தக்க அறிஞர்களிடம் தெளிந்து கொள்ளலாம்; கோயிற்றொண்டுகளுக்கு உதவி புரியலாம். சிரமதான இயக்கங்களை முன்னின்று நடத்தி நாட்டுக்கு நலந்தரும் பணிகளைச் செய்யலாம். இவ்வித மான சற்கருமங்களில் காலத்தைக் கழித்தால் சிறுவர்கள் நற்சிந்தனை யுடையவர்களாயும் நல்வார்த்தை பேசுகின்றவர்களாயும் நற்செய்கை புரிபவர்களாயும் விளங்குவார்களன்றோ? இன்றைய மாணவர்களது எதிர்காலச் சிறப்புக்கு இவை மிக அவசியம் கைக்கொள்ளப்பட வேண்டியவையாகும்.

# தருமபுர ஆதீன மகாசந்நிதானமவர்கள்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பிஷேகம், ருத்ரகலசாபிஷேகம் செய்து வழிபாடுகள் செய்து கொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் தில்லையில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமானுக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் ஆனித்திருமஞ்சன பெருவிழா மகாபிஷேகம் ஆனித் திங்கள் 26-ம் நாள் விடியற்காலை மகாபிஷேகம் நடைபெற்ற போது, அபிஷேகப் பொருள்களுடன் நிறைய கங்கா தீர்த்தமும் அபிஷேகம் செய்து வைத்து தரிசனம்செய்து கொண்டார்கள்.

ஆதீனத்தில் மகாசந்நிதானங்களாக எழுந்தருளிருந்தவர்களுள் 10 ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவ ஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள் தான் காசிக்ஷேத்திராடனம் செய்தவர்களாவார்கள். ஆனால் 25 ஆவது பட்டம் மகா சந்நிதானமாக எழுந்தருளி 25 ஆண்டுகளாக அருளாட்சியை நடத்திக்கொண்டு வரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரியசாமிகள் காசி யாத்திரை, திருக்கேதார யாத்திரை, பத்ரியாத்திரை, பசுபதிநாத்யாத்திரை, அமரநாத்யாத்திரை, திருக்கயிலாய யாத்திரை, பன்னிருஜோதிர்லிங்க யாத்திரை, தென்னாட்டிலுள்ள பாடல்பெற்ற எல்லா ஸ்தலயாத்திரை மற்றும் வடநாடு, கேரள நாடு இவைகளிலுள்ள புனிதஸ்தல, புனித நீர் ஆடல் யாத்திரை செய்து கொண்டுள்ளார்கள். பாரத பூமி பூமியில் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் காணாத பகுதிகள் இல்லையென்றே கூறிவிடலாம். "திருக்கயிலாய பரம்பரை" என்பதற்கு எடுத்துக் காட்டாக ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகளே திருக்கயிலாயமலையை கண்டுகளித்து தரிசனம் செய்து வந்த முதலாவது மகாசந்நிதானம் ஆவார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பெருமையினூர் வரதராசா கைம்பெண் விசாலாட்சி வட்டுக்கோட்டை மேற்கு —வழக்காளி

எதிராக

குணரட்ணம் ஜெயசிங்கம் வட்டுக்கோட்டை மேற்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 8735-ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுகாணியை 1970-ம் ஞு ஆவணிமீ 22-ந உ (22-8-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை: முதல்வட்டி ரூபா 5271-87-ம் 7-1-1967 தொடக்கம் 6-9-67 வரைக்கும் ரூபா 3500 க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 336-37 முதலில் 2000/- கொடுபட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைகோயிற்பற்று அராலிமேற்கு இறை 'கம்பிராப் புலம்' நெற் பர. 6 குளி 5 உலாந்தா S. முத்துக்குமாரசாமி அவர்களால் 3-4-60 ல் 1567-ம இலக்கம்கொண்ட படத்தில் 4-ம் துண்டாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. கிணறும் எல்லை கிழக்கு தம்பு குமாரவேலுவின் காணி, வடக்கு செல்லப்பா தம்புவுக்கும் நாகநாதர் கந்தையா நடராசாவுக்கும் உரிய காணிகளும், 12அடி அகலங்கொண்டதும் 14 குளி அளவுள்ளதும் குறித்த படத்தில் 5-ம் துண்டாகக் காண்பிக்கப்பட்டதும் 1-ம் துண்டுக்கும் மற துண்டுகளுக்கும் பொதுவாகவிடப்பட்டதுமான, கை ஒழுங்கை மேற்கு செல்லப்பா பாலசுப்பிரமணியத்துக்கும் பெண் விசாலாட்சிக்கும் சோமசுந்தரம் மகள் மஞ்சுளாவுக்குமுரியகாணிகள், தெற்கு சோமசுந்தரம்மகள் மஞ்சுளாவுக்கும் தம்பு குமாரவேலுவுக்குரிய காணிகள இந்தெல்லைப்படி இதடங்கலும் வடக்கெல்லையிலிருக்கும் ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு போக்குவரவு செய்யும் பாதையுரித்தும் பதிவு இலக்கம் யாழ்ப்பாணம் E 345/213.

அ. போ. எதிர்மனசிங்கி
கொம்மிஷனர். விலைமதிப்பாளர்
Commissioner of Sales
14, டேவிற் றேட்,
யாழ்ப்பாணம், 16-5-70.
எஸ். 176 31—7 70

## பிழை திருத்தம்

சென்ற 10-7-70 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் கொமிஷனர் திரு சி. ஆ. த வடிவேலு J. P. அவர்கள் வெளிப்படுத்திய M. B. 8734-ம் இலக்கக் கோட்டு விற்பனவு விளம்பரத்தில் தீர்வைத் தொகை என்னும் பகுதியின் இறுதியில் கோட்டுச்செலவு ரூபா 374-95 சதமும் என்பதுடன், இதில் ரூபா 500 கழித்து என்பதையும் சேர்த்து வாசிக்கவும்.

# சைவ சமயக் கல்வி

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

என்பதை முதன்முதல் எடுத்துக் கூறியவரும், அதற்காக வேண்டுவனவற்றைச் செய்தவரும் காவலரும் பாவலரும் புகழும் பெருந்தகைமை வாய்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே யாவர். அவர் காட்டிய நன் மூன் மாதிரியைக் கடைப்பிடித்தே நமது நாட்டில், சைவத் தமிழ் வித்தியாலயங்களும், ஆங்கில வித்தியாலயங்களும் எழுந்தன. இது வரையில் (1926) நிறைவுபெற்றிருக்கின்ற முயற்சி இன்னும் செய்யவிருக்கின்ற வேலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகச்சிறிய அளவினதேயாம் ஆதலால், சைவநன் மக்கள் இத்துறையில் இன்னும் பல்லாண்டுகளுக்கு இடைவிடாது முயற்சிக்க வேண்டும். (விவேகானந்தன்)

உலகிற்குக் கொடுக்கக் கூடிய பொருள் நம்மிடம் ஒன்றும் இல்லையாயின், நாம உயிர் வாழ்தற்கு உரியோமல்லோம். இன்றே தென்கடலினுள்ளே குதித்து உயிரைவிட்டுவிடுவதே முறையாகும்.

நாம் உயிர் வாழுகிறோம்; வாழ விரும்புகிறோம், ஆதலினால், நம்மிடத்திலும் கொடுக்கத்தக்க பொருள் இருக்கிறது. அதனைக் கொடுப்பதற்காகவே நமது நாட்டிற் கல்விக் கழகங்களை ஏற்படுத்துவோம்.

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு"

என்ற நமது பெருநாவலர் சொல்லிய திருமொழியின் படிகொடுப்பதுவே உயிர்கு ஊதியமாவது.

கொடுக்கக் கொடுக்கக் குறையும் பொருட் செல்வத்தைப் போலாகாது; கொடுக்கக் கொடுக்கக் மேலும் மேலும் பெருக்கமுறும் கலைச்செல்வம கொடுக்கும் தொழிலாற் சிறந்து விளங்குவதும், மறைக்குத் தொழிலால் இறந்தொழிவதும் இயல்பேயாம்

"கரக முறவு கலந்துண்ணக் கண்டீர்
அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்கு தையோ
இன்புற் றிடநாம் இனிதேடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே"

எனத் தாயுமான சுவாமிகள் தாங்கண்டனுபவித்த பேரானந்தத்திற் பங்குபெற உலகினரனைவரையும் அழைத்ததுபோலயாமும் உலகினரனைவரையும் நோக்கி,

"பதியே பசுவே பாசமென கண்ணு மூன்று பொருளியல்பு நவிலின் இதுவே யருளமுதம், உண்ணுமா விரைந்து வம்மின் உலகத்தீரே"

என விளித்துத் தொன்று தொட்டுத் தமிழ்நாட்டிற் பாராட்டி, வளர்க்கப்பட்டு வருகிற அளவைநூல். முப்பொருள் உண்மை உணர்த்தும் சிவஞானபோதம் முதலிய தெய்வநூல் என்னுமிவற்றை விபரித்துரைப்போமாயின், பெறற்கருமபொருளாகிய இவற்றைப் பெறுவதற்குப் பிற நாட்டினர் வந்து நிறைவார்களென்பதற் கையமில்லை.

அங்ஙனம் நமது தேயத்தறிஞரும் பிறநாட்டறிஞரும் ஒருங்கு கலந்து உறையுமிடமே சர்வகாலசாலை எனப்படுதற்குரியது. ஆழ்ந்தராய் வார்க்கு, நம்மிடம் மேற்றிசையோர் வைத்திருக்கும் பொருள் இல்லையாயினும், அதனிலும் சிறந்த பிறிதொருபொருள் உண்டென்பது நன்கு புலப்படும். உதாரணமாகச்,

சைவ சித்தாந்த உண்மைகளை எடுத்துக் கொள்வோம்; தமிழ் அணங்குக்கு அருங்கலம் போன்றிருக்கின்ற சிறந்த இத்தத்துவ நூலை முறைப்படியாராய்ந்து விருத்தி செய்வோமாயின் கொன்வியூசியஸ், புத்தர், ஸரதுஷ்டிரர் முதலியோருடைய நூல்களைத் தாநவித் தருவியாராய்கிறதே மேற்றிசை யறிஞர், மெய்கண்டாரை உவப்புடன் ஏற்றுப் பீடத்திருத்தி பணிந்து நிற்பர்.

திருக்குறளும், தொல்காப்பியமும் நமது மொழிக்குத்தானே அழகினைத் தந்து நிற்கின்றன. இவற்றிற் பொதிந்து கிடக்கும் பொருளை விருத்தி பண்ணுவோமாயின், சமூக வாழ்க்கையின் இயல்பினை அறியாமையால் நிலைதழும்பிச் சீரழிகின்ற மேனாட்டார் நம்மிடம் வந்து உண்மையறிவைப் பெற்றுய்வார்களன்றோ?

[ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்]

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம், 125, சிவன்கோவில் வடக்கு வீதி, திரு. க. தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1969ம் ஞு ஆகஸ்ட் (ஆவணி) மீ 1-ம் (1-8-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970ம ஞு ஆகஸ்ட் (ஆவணி) மாதம் 28-ம் திகதி (28-8-70) வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ். 182 31-7, 7—8—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

வழக்கு இல: M B 8503

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ கடன் நிவாரண சங்கம் வரையறுக்கப்பட்ட 278 பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

—வழக்காளி

எதிராக

1. கபிரியேல் தாவீது அல்லது அல்பேட்
2. பெண் அன்னம்மா 70/20 மத்தேயு ரோட், யாழ்ப்பாணம்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 8503-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விவரிக்கப்படும் ஆதனம் 1970-ஆம் புரட்டாதி மாதம் 7-ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:

முதலும் வட்டியுமாக ரூபா 3,633-33 சதம் மேலும் ரூபா 3,000/— க்கு 7-10-66 — 9-5-67 வரைக்கும் 10 வீதவட்டியும் கூட்டிய கூட்டிய தொகைக்கு 9-5-67 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 375-90 சதமும், இதில் 26-10-69 ல் வரும்படியில் கொடுத்த ரூபா 1,000/— மும் ஆதியில் வட்டியால் கொடுத்த ரூபா 650/— ம் செலவால் கொடுத்த 125/- ரூபாவும் போக மிகுதி.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் சுண்டிக்குளிக் கோவிற்பற்றும் இறையும் "கற்குளம் வயல் இலகடியும் குளத்து வயலும்" யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டில் 197-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்ட படத்தின்படி 5-ம் துண்டுக்காணி பர. கில. வர. 3 குளி 10, 3/10 கல் விடும் பயிர்வகைகளும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும், எல்லைகிழக்கு A.P. மாஸ்டர் பெஞ்சமின் ரேமண்ட் துண்டு. வடக்கு ஸ்ரீவன் அல்வோன்சன்சுக்குரிய 7ம் துண்டு. மேற்கு கபிரியேல் சின்னத்தம்பிக்குரிய 4ம் துண்டு. தெற்கு A துவக்கம் 5 A வரைக்கும்உள்ள பாதையின் ஒரு பகுதி. இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும்.

நா. க பொன்னுத்துரை J.P கொமிஷனரும்விலைமதிப்பாளரும் "அலைகம்" 28/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம். 27-7-70

எம். 183 31-7-70,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 9191

கரவெட்டி கிழக்கு, சண்முகம் கைம்பெண் சின்னச்சி

—வழக்காளி

எதிராக

பருத்தித்துறை, கரவெட்டி

1 கந்தையா செல்லம்மா அரும்
2 பெண் இராசம்மாவும்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B.9191ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1970ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ம் திகதி (22-8-70) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 3798/-ம். 24-6-67 தொடக்கம் 4-6-68 வரைக்கும் ரூபா 3000/-க்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 357-70சதமும் இவற்றில் 15-7-68ல் ரூபா 1000/-ம், 26-10-68 ல் ரூபா 600/-ம், செலவில் ரூபா 200/-ம் கட்டப்பட்டுள்ளது

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக் திவுப் பகுதி கரவெட்டி கோவிற்பற்று காரை கிழக்கு இறை "திக்கரை"

கூறுதிப்படி நி. ப. 25 ஆறுல் அளவுப்படி நி. ப 21 குளி 5 வீடுகளும், கிணறும், பனைகளும், செய்பயிர் வாங்கியிரும், எல்லை கிழக்கு கந்தையா பொன்னம்பலமும் பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு செல்லத்துரை அம்பலவாணருக்கும், வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்துக்கும் மற்றவர்கட்குமுரிய ஆதனம். மேற்கு சுப்பிரமணியம் கைம்பெண் சிவகாமிப்பிள்ளையின் ஆதனம், தெற்கு வேலுப்பிள்ளை பெண் சுந்தரிக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள் யாழ்ப்பாணம் C. 365/128 ல் மதியப்பட்டது. இதில் சொரியலாக அரைப் (½) பங்கும் அதனுடமைகளும்.

2. கூ கரவெட்டி கிழக்கு மல்லாகம், 25-6-70

இறை "மாணக்கை, கொட்டம்பனை, குமணம் கிருடியிருப்பு" நி. ப. 43¼, ஆறுல் அளவுப்படி நி. ப 26¾ எல்லை கிழக்கு வயித்திலிங்கம். இராமலிங்கத்தின் ஆதனமும், ரோட்டும், வடக்கு ரோட்டு, மேற்கு கார்த்திகேசு கந்தையாவுக்கும் வேலுப்பிள்ளை பெண் சுந்தராம்மாவுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கணபதிப்பிள்ளை கதிர்காமரின் உரிமையாளரின் ஆதனம். யாழ்ப்பாணம் C.363/99ல் மதியப்பட்டது. இதில் சொரியலாக நி. ப 16, 484/692ம் அதனுடமைகளும்.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சபாபதி சவுந்தரநாயகம், கனகசபை ரோட். மானிப்பாய்

வழ: இல M. B. 9978 எதிராக —வழக்காளி

அமிர்தலிங்கம் தம்பிராசா, எழுதுமட்டுவான் தெற்கு, எழுதுமட்டுவாள். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9978-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1970-ஆம் ஆண்டு ஆவணிமீ 19-ஆம் திகதி (19-8-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 16500/-ம் 21-5-1968தொடக்கம 25-10-1968வரைக்கும் ரூபா 10000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய்

ஆதன விபரம்

(1) வடமாகாணம் தென்மராட்சி நாவற்குழி கோவிற்பற்று நாவற்குழி இறை "சாவெண்கோட்டை மணற்காடு பெருவெளிக்கு வடக்கு" (நி பர 42) நிலப்பரப்பு நாற்பத்திரெண்டும் பனைகளும், தென்னைகளும், செய்பயிர் வான்பயிர்களும் வீடும், அதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு கண்டி ரோட் வடக்கு சரவணை சபாபதியினதும் பங்காளரினதும் ஆதனமும், சின்னத்தம்பி கார்த்திகேசுவினதும் பங்காளர்களினதும் ஆதனம், மேற்கு குளம், தெற்கு சபாபதி மகள் மாணிக்கத்தினதும் சின்னப்பு பெண் தங்கமுத்துவினதும் பங்காளர்களினதும் ஆதனம். பதிவு இல: F. 341/159 இதில் சொரியலாய் அரைவாசி.

(2) வடமாகாணம் தென்மராட்சி நாவற்குழி கோவிற்பற்று நாவற்குழி இறை "சாவல்கோட்டை பெருவெளிக்கு வடக்கும் தற்கட்டுப்புலமும்" நி. பர. 34 அளவின்படி (16) நிலப்பரப்பு பதினாறும் பனைகளும் தென்னைகளும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு: கண்டி ரோட்டு, வடக்கு: சின்னத்தம்பி இராமலிங்கத்தினதும் பங்காளரினதும் ஆதனம், மேற்கும் தெற்கும் ஏழுமலைவேலு சாமியின் ஆதனம் பதிவு இல: F. 341/258ம், F. 347/240ம் இதில் சொரியலாய் (½) அரைவாசி

"கலை இல்லம்" அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 24-7-70

கலைமணி பொ செல்வக்குமாரசுவாமி
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

எம். 173 24-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டயோசிசன் சேமநிதிச் சங்கம் கதீட்றல் தெரு யாழ்ப்பாணம் —வழக்காளி

இல: M B. 9440 எதிராக

1 அல்பேட் எட்வேட் திசவீரசிங்கி பெண்
2 மேரி றெபேக்கா சொர்ணம் வத்தலை
3 அகஸ்ரீன் லோறனஸ் புஷ்மானசிங்கி பெண்
4 றெஜினாலட் பொன்னம்மா, கொட்டாஞ்சேனை
5 அல்பிறேட் எட்வேட் தம்பர் பெண்
6 மேரல் புலோறன்ஸ் தம்பர், யாழ்ப்பாணம் (Town)
7 ஜே பி. டி. லா சா லே. டேவிற் பெண்
8 வேன் மகிறற், கொழும்பு. எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 9440-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ம் ஆண்டு ஆவணி மாதம் (ஆகஸ்டு) 29-ஆம் திகதி (29-8-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 18033-37ம், 23-9-67 தொடக்கம் 8-11-68 வரைக்கும் ரூபாய் 10,000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 650 சதம் 60 இதில் ரூபா 200/- குறைக்கப்படவேண்டியது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிகுழி கோவிற்பற்று யாழ்ப்பாணப் பட்டின மூன்றும் குறிச்சியிறை House and Premises "கவுஸ் அண்ட் பிறமிசஸ்" என்னும் Stone House "ஸ்ரோண் கவுஸ்" என்னும் அழைக்கப்படும் காணி பரப்பு நில லாச்சம் 4 நாலும் கட்டிடங்களும் கிணறும செய்பயிர்வகைகளும் இன்னும அதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு 3ம் குறுக்குத் தெரு, வடக்கு மூத்ததம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனத்துக்குப் போதும வழி மேற்கு A. S. நீக்கோலாசின் உரிமைக்காரரினது ஆதனம். தெற்கு பிரதான வீதி, (Main Street) பதிவு இலக்கம்: 195/159

"கமலபதி" ஆஸ்பத்திரி வீதி, மண்டைதீவு, 24-6-70

மூ. நவரத்தினராசா
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

எம். 184 31—7—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

நாகலிங்கம் இராசையா கரும்பிராய் வடக்கு —வழக்காளி

இல. M. B. 10791 எதிராக

வல்லிபுரம் கணபதிப்பிள்ளை மதிதைமேனி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 10791ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5-ம் திகதி (5-9-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1737 ம் சதம் 50ம், 9-5-1969 தொடக்கம் 14-12-1969 வரைக்கும் ரூபா 1000/-க்கு நூற்றுக்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 238 ம் 21 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று கதிரிப்பாய், "இராசகிரி" விஸ்தீரணம் 46 லாச்சம் வரகுச்செய்கை 14 குளி (46 Lms V. C. & 14 Kls) கிணற்றுடன் இதற்கு எல்லை கிழக்கு வல்லிபுரம் சபாபதிப்பிள்ளையினுடையதும் முருகர் தம்பரினதும் மறுபேரினதும் ஆதனம். எல்லை வடக்கும் மேற்கும் வல்லிபுரம் சபாபதியினதும் முருகர் தம்பரினதும் மறு பங்காளரினதும் ஆதனம்: எல்லை தெற்கு முருகர் வேலுப்பிள்ளையின் ஆதனம. இது முழுவதிலும் பிரிக்கப்படாத நாலில் ஒரு பங்கு. பதிவு யாழ்ப்பாணம் K. 222/4

"நித்தியகல்யாணி" பலாலி ரோட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 8—7—70

அ. சிவானந்தன்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

எம். 179 24—7—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: 3414 சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

மட்டுவில் தெற்கு,

1 K. வல்லிபுரத்தின் கைம்பெண் வள்ளியம்மை
2. வல்லிபுரத்தின் மகள் ஞானேஸ்வரி
(Minor) 3. வல்லிபுரத்தின் மகள் புவனேஸ்வரி பராயமற்றவர்)
(Minor) 4. வல்லிபுரத்தின் மகள ராஜேஸ்வரி (பராயமற்றவர்)
5. வல்லிபுரத்தின் மகள் நாகேஸ்வரி
6. வல்லிபுரம் பரமநாதன்
7. வல்லிபுரம் பத்மநாதன் —வழக்காளிகள்

எதிராக

சாவகச்சேரி தெற்கு.

1. தம்பு செல்லத்துரையும் பெண்
2. ஜெயலட்சுமி
(DEAD) 3. காலஞ்சென்ற சின்னத்தம்பி சங்கரப்பிள்ளையும் பெண்
4. காசிப்பிள்ளை —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் 3414 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு ஆவணி மீ 26-ம் திகதி (26-8-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3610-85 சதம் இதில் ரூபாய் 2100/-க்கு 2-7-67 தொடக்கம் 12-1-68வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 260-99 சதமும் இந்த கோட்டில் கட்டப்பட்ட ரூபா 1500/- தவிர்த்து, மேலதிக செலவு ரூபா 32-ம் 25 சதத்துடன்

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இறை "உயிலடிவளவு" நிலப்பரப்பு 2 குளி 4½ (2 Lms. V. C. 4½ Kls.) எல்லை கிழக்கு: சின்னத்தம்பியின் பெண் தங்கத்தினுடையதும், மறுபேரினதும் ஆதனம் வடக்கு: சின்னத்தம்பி தர்மலிங்கத்தின் ஆதனம, மேற்கு: ஒழுங்கையும், சின்னத்தம்பியின் கைம்பெண் அன்னபூரணத்தின் ஆதனமும் தெற்கு: சின்னத்தம்பி செல்லையாவின் பெண் தெய்வானையின் ஆதனம், இடங்களும் கல்வீடும், கிணறும் அதைச் சேர்ந்தவைகளும். பதிவு F. 3328/232

"நித்தியகல்யாணி" பலாலி ரோட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 26—7—70

அ. சிவானந்தன்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்

எம். 180 31-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம், உடுவில், சண்முகம் சத்தியவதியின் ஆதனங்களுக்கும் அவவுக்கும் பராமரிப்புகாரன் நியமிக்கும் விஷயமாக —பராயமற்றவர்

சுன்னாகம், உடுவில் சங்கரப்பிள்ளை சண்முகம் கைம்பெண் அன்னம்மா —ஊதி

இல: வீ/354 எதிராக

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி,

1 சண்முகம் மகள சத்தியவதி
2. எம். எஸ். வேலுப்பிள்ளை — உத்தரவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் வீ/354 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 7ம் திகதி [7-9-70] திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று ரூபா 5000/- க்குக் குறையாத ஓர் தொகைக்கு என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "கலட்டி" நி. பர. 9 தென்கிழக்குக் காணியிலிருக்கும் கிணற்றிதற்குரிய பங்கும வழிவாய்க்காலுரித்தும் இதற்கெல்லை கிழக்கு வீரேசன் நாகலிங்கத்தினுதனமும ஒழுங்கையும, வடக்கு - ஒழுங்கை, மேற்கு இளையதம்பி சரவணமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வயிரமுத்து சங்கரப்பிள்ளை சண்முகத்தினுதனம் இதடங்கலும்.

விரேசன் ரோட், கோண்டாவில், 23-7-70.

S. இரத்தினசபாபதி, J. P
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

எம். 175 31-7-70

## COMMISSION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ இல: 10246

1. புலோலி மேற்கு கணபதிப்பிள்ளை இராமலிங்கத்தின் மரண சாதனத் தத்துவக்காரன் புலோலி மேற்கு தியாகராசா விஜயரத்தினம் —வழக்காளி

எதிராக

1. சபாபதிப்பிள்ளை காசிநாதர்
2. பெண் மாணிக்கம்மா இருவரும் அல்வாய் வடக்கு அல்வாய் —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்விபரிக்கப்படும் ஆதனங்களை 1970-ம் ஹு செப்டம்பர் மீ 5-ம் திகதி (5-9-70) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிதொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மாப்பாணக்குறிச்சி யிறை கிணற்றும் பார்த்தெணி நி. பர. 26½ ஷெ தோட்டம் 1 இந்தப் பிரிவுகளில் கிழக்குப் புறமாக மூன்றிலிரண்டு பங்கிடைவாசியில் வடக்குப் புறமாக இரண்டரைப் பரப்புக் கழித்து மிகுதிக்கு பரப்பு 6 குளி 15½ பனைகள், வடலிகள் கிணறுகளும் எல்லை கிழக்கு: தெரு, வடக்கு: சரவணமுத்து பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்குப் பிணறுகாணும் 2ம் ஆதனம், இவ்வெல்லைக்குள் நிலத்தும் சொரியல்பாலில் ஒரு பங்கும், பழைய கிணறுகள் இரண்டிலும், பனைகள், வடலிகளும் இதற்குரிய பங்கும், புதிதாக வெட்டுவித்த கிணற்றில் சொரியலாய் நாலில் ஒரு பங்கும்.

மதிப்பிட்ட விலை ரூபா 3,000/-)

(2) அல்வாய் நீலகுட்டியார் குறிச்சியிறை எள்ளுக்கொண்டான் நி. பர. 10, 5/8 ஷெ தோட்டம் 3, பனைகள், வீடுகள், கிணறும் எல்லை கிழக்கு தெரு, வடக்கு இராமலிங்கம் சரவணமுத்துவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கும், தெற்கும் சுப்பிரமணியம் பெண் தங்கமுத்துவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குள் வீடு, கொட்டில்கள், சொந்தமாகவும் மற்றைய யாவிலும் சொரியலாய் நிலப்பாப்பு மூன்றரையும் (மதிப்பிட்ட விலை ரூபா 6,125/-)

| | |
|---|---|
| 1. தீர்வைத்தொகை வட்டியும் முதலும் 27-10-68ல் ரூபா 300/- கழித்து | ரூபா 2820 00 |
| 2. வட்டி ரூபா 1600/-க்கு 10 வீத வட்டி 27-10-68 தொடக்கம் 27-9-69 வரை | 146-66 |
| 3. (1 & 2) | 2966-66 |
| 4. வட்டி ரூபா 2966/-க்கு 5 வீதப்படி 27-9-69 தொடக்கம் 27-7-70 வரை | 123-60 |
| 5. செலவு தொகை முத்திரைச் செலவுடன் | 134-00 |
| ரூபா | 3224-26 |
| 6. வட்டி ரூபா 2966/-க்கு 5 வீதப்படி 28-7-70 தொடக்கம் 26.9.70 வரை | 24-72 |
| மொத்த ரூபா | 3248-98 |

சிவலிங்கநிலையம், க. நல்லலிங்கம்
Commissioner of Sales & Valuer.
வீ. மு. ரோட், ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்
பருத்தித்துறை. 26-7-70. எம். 178 31—7—70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சுழிபுரம் செல்லையா கைம்பெண் இந்திராணி —வழக்காளி
வழ: இல. M. B. 8723 எதிராக
வண்ணார்பண்ணை தென்மேற்கு, யாழ்ப்பாணம்
நாகமுத்து சிவரத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8723-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஹு புரட்டாதி மீ 2-ஆ திகதி (2-9-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 6500/-ம், 4-1-67 தொடக்கம் 14-12-67 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 256-39சதம் வட்டி முதலில் ரூபா 2000/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சண்டிக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாணம் சிதாபி பாக்சல் வதி, 'சுந்தர விலாஸ் கட்டடம்'' பொலிஸ் மதிப்பு இல: 6 பர. நி. இலா இரண்டு குழி ஒன்றுடன் பத்தொன்பதில் பதின்மூன்று (பர. நி. இலா. 2 குழி 1, 13/19, மேல் வீட்டுக் கட்டிடம் விறுந்தை, முற்றம், கிணறும், மற்றும் அதற்குரியவைகளும் எல்லை கிழக்கு இராசா அருளம்பலம் பெண் அமிர்தம்மாவிற்குரிய ஆதனம், வடக்கு: சேனுதிராசா நாகநாதர் கைம்பெண் சிவக்கொழுந்து அம்மாவிற்குரியவாதனம், மேற்கு: மாணிக்கர் மயில்வாகனம் கைம்பெண் திலகவதியம்மாவிற்குரிய ஆதனம், தெற்கு ரோட்டு. இதன் பதிவு D: 263/142

வை. ஏரம்பமூர்த்தி
காரைநகர், 1970-ம் ஹு ஆனி மீ 29-ம் திகதி கொமிஷனரும்
எம். 177 31-7-70, விலைமதிப்பாளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 6089
சுப்பையா பொன்னம்பலம் கந்தையா வண்ணார்பண்ணை கிழக்கு தற்சமயம் 247 காவலர் ரோட், யாழ்ப்பாணம்.
—வழக்காளி.

எதிராக
நல்லையா திருஞானம் 560 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6089 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ஆம் ஆண்டு ஆவணி மாசம் 19-ம் திகதி (19-8-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 4140/- ம் 4-10-63 தொடக்கம் 11-12-67 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 317 ரூ 55 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவில்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கில் உள்ள கும்பன் வயல் என்னும் 1 லிலப்பரப்பும் 16 குளிரு இதனுள் அடங்கிய வீடும் கணறும் மற்றும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கந்தசாமி கோவில் ஆதனம், வடக்கு ரோட்டு, மேற்குமடமும் ரோட்டு, தெற்கு குளமும் கந்தசாமி கோவில் ஆதனமும். பதிவு இல D 278/153.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
தொல்புரம், மதிப்பாளரும்.
3-7-70 எம் 181 31-7-70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 10032
பொன்னையா மகின்னன் கொக்குவில், யாழ்ப்பாணம்.
—வழக்காளி

எதிராக
வேலுப்பிள்ளை மார்க்கண்டு சாவகச்சேரி தெற்கு யாழ்ப்பாணம்.
— எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M B 10032ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும துண்டுக்காணி 1970ம் ஹு புரட்டாதி மாதம 16—ம் திகதி (16—9—70) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1820/— 4-6—1968 தொடக்கம் 31-12-68 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 317-49

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி 'கடற்தரைக் கிராய்வயலும் கடற்கரைப்பிட்டியும்' என்னும் காணி நிலப்பரப்பு 30 (முப்பது) எல்லை கிழக்கு பயனற்ற காணி, வடக்கு தண்ணீர்வாய்க்கால். மேற்கு வயிரவன் மகன் சடைச்சிக்கும் மறுபேருக்கும் தெற்கு நாகலிங்கம் நாகமுத்தின் செல்லத்துரைக்கும் பதிவு இல: F. 160/87

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
'வேல்பதி'' புத்தூர்
25—6—70. (எம். 185, 31-7-70)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுப்பிரமணியம் கைம்பெண் அன்னம்மா, காரைதீவு கிழக்கு காரைதீவு —வழக்காளி

இல M B 11137 எதிராக

1. ஆறுமுகம் இராமுப்பிள்ளையும்
2. பெண் பாக்கியமும் காரைதீவு கிழக்கு, காரைதீவு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 11137 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970-ம் ஹு ஆவணி மீ 30-ந் திகதி (30-8-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 1584/-ம் 27-9-69 தொடக்கம் 9-3-70 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 318-60

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோயிற்பற்று காரைதீவு கிழக்கு தங்கோடை களபூம் இறை 'மணியத்தாவயல்' நெ பர 14 எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் நாகமுத்துவினுதனம் வடக்கு வேலுப்பிள்ளை பெண் சின்னக்குட்டியிதைனம். மேற்கு சின்னத்தம்பி பெண் சிவகாமனுக்கும் பிள்ளை மடத்துக்குமுரிய காணிகள், தெற்கு கந்தையா கை பெண் தெய்வானைக்கும் பங்காளருக்குமுரிய காணிகள் இதடங்கலும்,

2. ஷெ காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கு களபூமி இறை 'அபிலா' வி. பர 9. 7/8 வான்பயிர்களும் எல்லை கிழக்கு தம்பையா பெண் சிதம்பரத்துக்கும் மறுபேருக்குமுரிய காணி வடக்கு ஆறுமுகம் பெண் சுந்தரத்துக்குரிய காணி, மேற்கு ஈடுபிடித்திருக்கும கந்தர் வேலுவுக்கும் மறுபேருக்குமுரியகாணிகள் தெற்கு கந்தையா பெண பாறுபதக்குரிய காணி, பதிவு இல: C. 129/252

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 187 31-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. ஆறுமுகம் செல்லையா கருப்பிராய்
2. சின்னப்பு இராசையா தற்போழுது மலேஷியா வரின் தத்துவகாரன் A C. யோகரட்ணம —வழக்காளிகள்

எதிராக

1 இராசரத்தினம் இரத்தினராசாவும்
2 பெண் வசுனேஸ்வரியும் நல்லூர் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8578ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஹு ஆவணி மீ 29-ம் திகதி (29—8 70 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6412/-ம, 2-11-66 தொடக்கம் 10-4-69 வரைக்கும் ரூபாய் 3500/—க்கு 9% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 401-45

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய்இறை ''கொக்கம்பு'' நில. பர. 19ம் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சின்னப்பு பெண் நாகமுத்துவினுதனம் வடக்கு கணபதிப்பிள்ளை பெண் அன்னம்மாவுக்கும் பங்காளருக்கும் செல்லையா பெண் அன்னமுத்துவுக்குமுரிய காணி. தெற்கு குருசேசு வீரசிங்கத்துக்கும் பொன்னம்பலம் பெண் தையலம்மாவுக்கும் தாமோதரம்பிள்ளை பெண் செல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய காணிகள் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

நீ. அன்ரனிப்பிள்ளை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
எம். 188 31 7 70

## சைவ சமயக்கல்வி

[2-ஆம் பக்கத்து வளர்ச்சி]

தொடர் அடுத்தவாரம் வரும்.

## வேலணை, முருகனுலயம்

வேலணையூர் சைவ மக்கள் முயற்சியினுல் முருகப் பெருமானுக்கு ஒரு சிறப்பான ஆலயம் வேலணை சரஸ்வதி வித்தியாசாலைக் கருகாமையில் நிறுவப்பட்டுள்ளது. வேலணை கிழக்கில் ஒரு முருகனுலயமில்லாத குறை நீங்கிவிட்டது. வேலணை சரஸ்வதி வித்தியாசாலையினதும், வேலணை கிழக்கு மகளிர் வித்தியாலயத்தினதும் மாணவ மாணவிகளுடைய கடவுள் வழிபாட்டிற்கு இவ்வாலயம் உதவும். ஷெ ஆலயம் நிறுவப்பட்டுள்ள இடத்தில் பழமையாகவுள்ள வைரவாலயமும் செவ்வனே பேணப்பட்டு வருகின்றது.

X X X

அனலைதீவு ஐயனர் கோயில் மகோற்சவம் 7-8-70 ல் ஆரம்பமாகி 17-8-70 பூர்த்தியாகும். 15-8-70 வேட்டைத் திருவிழாவிலன்று சுவாமி புளியந்தீவு நாகதம்பிரான் கோவிலுக்கு எழுந்தருளுவர்.

X X X

புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரியம்பாள் கோவில் வருடாந்தமகோற்சவம் 7-ந் தேதி ஆரம்பமாகி 16-8-70 ல் பூர்த்தியாகும். விழாக் காலத்தில் சமய விரிவுரைகள் நிகழும்.

## பாதயாத்திரையாக பெண் கதிர்காமத்துக்குச் சென்ருர்

பாத யாத்திரையாகக் கதிர்காம யாத்திரை செய்த 65 வயதையடைந்த பெண் செல்லும் மார்க்கத்தில் செல்லவேண்டிய பாதையைத் தவறவிட்டார் நாலு ஐந்து நாள் அலைந்து திரிந்தார் கடைசியாக இனந்தெரியாத ஒருவர் வந்து வழிகாட்டி அவ்வம்மையாரை கோயிலடியிற் சேர்த்தனர்.

## பிழை திருத்தம்

சென்ற 17-7-70 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் கொமிசனர் திரு வை ஏரம்பமூர்த்தி (காரைநகர்) அவர்கள் வெளிப்படுத்திய வழ. இல. 5259 A இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் ஷெ விற்பனவுத் தேதி (19-7-70) ஆவணி என்றிருப்பதை 19-8-70 என்றும், இதே தேதி இந்துசாதனத்தில் திரு. வை ஏரம்பமூர்த்தி (கொமிஷனர் வெளிபடுத்திய வழ இல. M. B. 10179 இலக்க விளம்பரத்தில் 20-8-70 ஆடி என்றிருப்பதை 20 ஆவணி மீ என்றும் திருத்தி வாசிக்கக் கோருகிறோம்.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 31—7—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்